Kr

# முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2019

## பத்தாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 1.30 மணி

## தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. பலவுள் தெரிக:** 10×1=10

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ...............
   அ) குலை வகை ஆ) மணி வகை இ) கொழுந்து வகை ஈ) இலை வகை
2. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு
   அ) மலேசியா ஆ) சிங்கப்பூர் இ) இந்தியா ஈ) இலங்கை
3. "பூங்காற்றே! இத்தனை நாள் உனைப் பாடாதிருந்து விட்டேன்" என்று வருந்திய கவிஞர்
   அ) தனிநாயக அடிகள் ஆ) தேவகோட்டைவாழூர்த்தி
   இ) இளங்குமரனார் ஈ) பாரதியார்
4. சரியான கருத்தினைக் கண்டறிக:
   1) தான் மட்டும் உண்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை
   2) விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது
   3) நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத்தலைவிக்கு உண்டு
   அ) 1 - சரி ஆ) 2, 3 ம் சரி இ) மூன்றும் சரி ஈ) மூன்றும் தவறு
5. பாப்பத்தே! எண் தொகையே - இவை தரும் தொகை நூல்கள்
   அ) பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு ஆ) எட்டுத்தொகை, இரட்டைக் காப்பியம்
   இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஈ) எட்டுத்தொகை, ஐஞ்சிறுங்காப்பியம்
6. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
   உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின்
   இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?
   அ) உருவகம், எதுகை ஆ) மோனை எதுகை
   இ) முரண், இயைபு ஈ) உவமை எதுகை
7. பொருந்தாதவற்றைக் கண்டறிக:
   அ) நைடதம் ஆ) விவேக சிந்தாமணி இ) வெற்றி வேற்கை ஈ) காசிக் காண்டம்
8. எட்டு என்பது சான்றாக வரும் மொழி ............
   அ) தனிமொழி ஆ) தொடர் மொழி இ) பொது மொழி ஈ) தொழிற்பெயர்
9. கீழ்க்கண்டவற்றில் வேற்றுமைத் தொகை எது?
   அ) மதுரை சென்றார் ஆ) தேர்ப்பாகன் இ) வீசு தென்றல் ஈ) செங்காந்தள்
10. வருக ! வருக ! வருக ! என்னும் தொடரில் ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வரக் காரணம்
    அ) உவகை ஆ) ஆழ்ந்த சிந்தனை இ) வெறுப்பு ஈ) அவசரம்

**II. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** 5×1=5

11. *சொல்லைக் கண்டுபிடித்து புதிரை விடுவிக்க :*
    ஓரெழுத்தில் நந்தவனம் - இரண்டெழுத்தில் வனம் ............
12. *பழமொழியை நிறைவு செய்க :* விருந்தும் ...............
13. *சொல்லில் மறைந்துள்ள தொகையை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க :*
    1. கீரி பாம்பு

14. *எண்ணுப் பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக:*
ஐந்து சால்பு ஊன்றிய தூண்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை
15. கீழ் உள்ள ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச்சொல் தருக: Homograph

**III. கீழ்வரும் கருத்திற்கேற்ற மனச் செய்யுளை எழுதவும்:**

16. பாண்டிய மன்னனின் மடியில் தவழ்ந்த மகளின் பெருமையை விளக்கும் பாடல் **4**
17. பொருளின் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும் என்ற கருத்தை உணர்த்தும் குறள். **2**

**IV. கீழ்க்காணும்வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளிக்கவும்: 5×2=10**

18. தாவரங்களின் இளமைப் பெயர்களை எழுதுக.
19. வசன கவிதை குறிப்பு வரைக.
20. காசிக் காண்டம் எவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது?
21. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?
22. வினைத் தொகை என்றால் என்ன?
23. விருந்தை எதிர்கொள்ளும் தன்மை குறித்து குறுந்தொகை அடிகள் புலப்படுத்துவது யாது?
24. பாரதியார் காற்றிடம் வேண்டும் வேண்டுகோள்கள் யாவை?

**V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக: 2×3=6**

25. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
26. காற்றின் பயன்கள் யாவை?
27. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விவரி.
28. *நச்சுப்படாதவன்* செல்வம் - அடிக்கோடிட்ட இச்சொல்லுக்கு பொருளையும், விளக்கும் கருத்தினையும் விளக்குக.

**VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும்: 1×7=7**

29. தமிழின் சொல் வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரை குறிப்புகளை எழுதுக.
30. முல்லைப்பாட்டில் கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.
31. புயலிலே ஒரு தோணி கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும், அடுக்குத் தொடர்களும், ஒலிக் குறிப்புச் சொற்களும் புயலில், தோணிபடும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**VII. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதவும்: 1×6=6**

32. 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதவும்.
33. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதவும்.

-------